அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.
நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றோம்.

விசித்திர வினாக்கள்

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! இனியெல்லாவண்ணம் இறைவன் உங்களுக்கு இஸ்லாத்தின் இனிமையையும் இகபர சாதகங்களுக் குரிய மேன்மையையும் கொடுத்தருள்வானாக. எமது இணையில்லாத இஸ்லாமார்க்கமானது இறைவனால் அருளப்பட்ட தனித்திருவேதமாகிய அல்புர்க்கானின் அஸ்திவாரத்தின் மீது அருமையாக அமைக்கப்பட்டிருக்கும் ஓர் ஒப்பற்ற உயரிய சுத்த சத்தியசன்மார்க்கமாயினும் இதன் தற்காலராஜீயநிலைமையோ மிகவும் பரிதபிக்கத்தக்க விதமாக மிகத்தாழ்ந்து கொண்டே வருகின்றது. சென்ற சிலவருஷங்களாக ஐரோப்பாவில் நடந்து வந்த மகாயுத்தத்தின் பயனாக இஸ்லாமார்க்கம் இப்போது அடைந்திருக்கும் கதியானது நினைக்க மிகவிசனத்தைத் தரத்தக்கதாயிருக்கிறது. இஸ்லாமியராஜாங்க விஷயம் இவ்வளவு பரிதாபகரமான நிலைமைக்கு வந்து கொண்டிருக்கும் போது எமது சுத்த சத்திய சன்மார்க்கத்தின் கொள்கைகளையும் பலர் பலவாறு தாக்குகின்றனர். யார் எவ்வாறு தாக்கியபோதிலும் இறைவனால் அருளப்பட்ட இஸ்லாமார்க்கம் ஒரு போதும் குறைவுபடப்போகிறதில்லை. ஆனால் பிறமதத்தினர் எமது இஸ்லாமார்க்கத்தை உலகத்தோர் பார்வையில் மிகத்தாழ்த்தி

காட்டுவதுபோல் பாவனைசெய்து இஸ்லாமிய சகோதரர் களின் மனஉறுதியை அசைக்கப் பார்ப்பதோடு இதரமத த்தினருக்கும் இஸ்லாத்திலிருக்கும் மதிப்புக் குறையும் படி செய்கின்றனர். ஆதலின் முஸ்லிம்களின் ஈமான் கெ டாமல் உறுதிப்படும் பொருட்டும் இஸ்லாத்தின் இணியில் லா மேன்மை உண்மையாக உலகத்தவருக் கெல்லாம் நன் குவிளங்கும் பொருட்டும் இதரமதத்தினரின் கேள்விகளுக் குக் கற்றுணர்ந்தடங்கிய நம்முஸ்லிம் மௌல்விகள் தக்க விடைபகர்தல் வேண்டும். இஸ்லாமிய ராஜாங்கச் செல் வாக்கு மிகக்குறைந்து கிடக்கும் இந்நாளில் இஸ்லாத்தின் கொள்கைகளையும் பொய்யென்று எண்பிக்க வாதிக்கும் இதரமதத்தினர்களின் தாக்குதல்களுக்கு நம்மௌல்விகள் தக்கவிடை பகராது விடுவரேல் முஸ்லிம்களுக்குள் பலரு க்கு ஈமானில் தள்ளாட்டம் ஏற்படுவதோடு நாளடைவில் இம்மார்க்கமும் பலஹீனப்படும்படி நேரிடும். முஸ்லிம்களு க்குள் பலஹீனம் ஏற்படுவதுடன் இதரமதத்தினரும் இம் மார்க்கத்தைப்பற்றிக் குறைவாய் மதிக்கத்தலைப்படுவர். அதற்கு இடங்கொடுப்பது ஆகாது.

'குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டிய னிங்கில்லை
குறும்பியளவாக் காதைக் குடைந்துதோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லியில்லை
இரண்டொன்றாய் முடிந்துதலை யிறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்துபாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே,"

என்றொரு வித்வான் சொல்லியிருப்பதுபோல் மார் க்க உணர்ச்சியே இன்னதென் றறியாத சில சாதாரண,

முஸ்லிம்களுக் கிடையில் சென்று "கடபடாம்" என்று சொல்லிப் படாடோபம் செய்வதனுலாவது, செல்வவான்களிடம் சென்று அவர்களுக்கிசைய இச்சகம்பேசி மெச்சுதல் பெறுவதனுலாவது, "இஷா அத்தே இஸ்லாம்" என்னும் சன்மார்க்கப்பிரசாரம் பன்மார்க்கரும் மெச்ச மிகநன் மார்க்கமாய்ச் செய்து வரும் உண்மையான உத்தமர்களை க்ஷாத்திரத்துடன் ஆத்திரமாய் உதாசினம் செய்வதனுலாவது இஸ்லாத்துக்கு ஒன்றும் மேன்மை வரப்போகிறதில்லை. கற்றுணர்ந்த மௌல்விகளாயிருப்பவர்கள் பிறமதத்தினரின் தாக்குதல்களுக்குத் தக்கசமாதானம் சொல்லி எம்முஸ்லிம் சகோதர்களின் ஈமானையும் உறுதிப்படுத்தி இதரமதங்களைக்காட்டினும் இஸ்லாமே சிறந்தமார்க்கமென்பதையும் எல்லோரும் அறிய எண்பித்தல் வேண்டும். தாம் கற்றதன்பயனுகப் பிறமதத்தினரின் விசித்திரவினுக்களுக்கு விடைபகர்வார்களாக.

இனிமையான இஸ்லாமியசகோதரர்களே! லூடியானு என்னும் பட்டணத்திலிருக்கும் கிரிஸ்துமத புத்தகசாலையி(கிரிஸ்டியன் புக்ஸ்டோரி)லிருந்து ஹக்காயிக்கேகுர் ஆன் (குர்ஆனின் உண்மைகள்) என்னும் பெயர்பூண்ட ஒரு சிறு புத்தகம் வெளியாயிருக்கின்றது. அப்புத்தகத்தில் கிரிஸ்தவர்கள் வாதிக்கும் விஷயமாவது:— நம்புத்தகுதியில்லா விஷயங்களையும் கட்டுக்கதைகளையும் நீக்கிவிட்டுக் குர்ஆனில் சொல்லியிருக்கும் கருத்துக்களைக் கவனிக்குங் காலத்தில் மஸீஹுப்னுமரியம் (ஏசுநாதர்—நமது ஈஸா அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நமது நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக்காட்டினும் சிரேஷ்டமுள்ளவராக இருக்கிறார்கள், என்பதே. நமது நபிகள் பிரானைக்காட்டினும் ஈஸா

அலைஹிஸ்ஸலாம் சிரேஷ்டமுள்ளவர்களா யிருக்கிறார்க ளென்று அவர்கள், எண்ணியிருப்பதில் இஸ்லாத்தைக் காட்டினும் கிரிஸ்துமார்க்கம் சிரேஷ்டமுள்ள தென்பதை எண்பிக்க அக்கிரிஸ்தவர்கள் நம்முடைய குர்ஆனையே ஆதாரமாக வைத்துக்கொண்டு 14 கேள்விகள் கேட்கின்றனர். இவற்றிற்கு எமது மித்திரரத்தினங்கள் தக்கவிடைபகர்ந்து ஈஸாயிமார்க்கத்தைக் காட்டினும் எமது இஸ்லாமார்க்கமே சிறந்த தென்று நிலை நாட்டுவார்களாக.

அவர்கள்கேட்கும் வினா: 1. (a) மஸீஹின் (ஏசுவின்) ஜனனம் அற்புதமான ஜனனமென்பது குர்ஆனாலேயே ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட அற்புதம் ஒன்றும் ஹஸரத்து முஹம்மது (ஸல்) சாகிபுக்கு ஏற்பட்டதில்லை. ஆதலின் உங்கள் முஹம்மது (ஸல்) நபியை விட எங்கள் ஏசுநாதர் (அலை) சிறந்தவரல்லவா?

(b) ஏசுவின் (ஈஸா அலை.) ஜனனத்தைப்பற்றி மரியமுக்கு ஜிப்ரீல் என்னும் அமரர் மூலமாய் அறிக்கை வந்த தென்று உங்கள் குர்ஆன் சொல்கிறது. இப்படிப்பட்ட அறிக்கை யொன்றும் உங்களுடைய நபியின் ஜனனகாலத்தில் இறங்கவில்லை. இதனால் உங்கள் முஹம்மது (ஸல்) நபியைவிட எங்கள் ஈஸா (அலை) நபி சிரேஷ்டரல்லவா?

வினா: 2. எங்கள் ஏசு (அலை) வின் தாயைப்பற்றி உங்கள் குர்ஆனில் "ஆண்டவன் உலகத்திய ஸ்திரீகளெல்லாரைவிட உம்மைச் சிலாக்கியமாகத் தேர்ந்தெடுத் திருக்கிறான்," (அல்குர்ஆன், 3:41) என்று சொல்லி அவர்களை ஆண்டவன் மேன்மைப்படுத்தியிருக்கிறான்; இன்னும் அம்மாதாவுக்கு ஸித்தீக்கா என்னும் பட்டமும் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆனால் ஹஸரத்து முஹம்மது (ஸல்) சாகிபு அவர்களின் தாயாருடைய பெயர்கூட அல் குர்ஆனில்

சொல்லப்படவில்லை; மேலும் சிலமுஸ்லிம்கள் உங்கள் நபியின் தாயார் ஈமானுள்ளவர்களா இல்லையாவென்பதைப் பற்றியும் சந்தேகங் கொண்டவர்களாயிருக்கின்றனர். இதனால் யார் பெரிய நபியென்று நினைக்கிறீர்கள்?

விஞ : 3. எங்கள் ஏசு (அலை) அவதரித்த காலத்தில் இயற்கைக்கு மாறான அதிசயங்கள் நடந்தேறியிருக்கின்றன; உதாரணமாக, காய்ந்திருந்த மரமானது பசுமை கொண்டு பூத்தது; ஓர் நீர் ஊற்றும் சுரக்க ஆரம்பித்தது. இப்படிப்பட்ட அதிசயம் உங்கள் நபிக்கு நிகழ்ந்ததா?

விஞ : 4. "தொட்டிலில் இருக்கும்போதே மனிதர்களுடன் பேசினீர்" (அல்குர்ஆன் 5: 110) என்று ஆண்டவனே சொல்லி யிருப்பதனாலும் பாலகனாயிருக்கும்போதே வேதபுத்தகத்தையும் தீர்க்கதரிசிப் பட்டத்தையும் அடைந்ததனாலும் எங்கள் ஏசு நாதர் (அலை) எல்லா நபிமார்களைக்காட்டினும் சிரேஷ்டர் என்பது தெளிவாய் விளங்கவில்லையா?

விஞ : 5. ஏசுவின் (அலை) விரோதிகள் அவரைப்பிடிக்க எத்தனித்தபோது வானலோகத்திலிருந்து அமரர்கள் இறங்கி வந்து அவரை இப்பஞ்சபூத சம்பந்தமான தேகத்துடனே வானுலகுக்குக் கொண்டுபோய் விட்டாரென்பது உங்கள் குர்ஆனாலேயே ஏற்படுகிறது; ஆனால் மக்கமா நகரில் முஹம்மது (ஸல்) சாகிபை எதிரிகள் முற்றுகைபோட்டபோது அவரைக்காப்பாற்ற யாரும் தேவதூதர் வரவில்லை; அவர் வானலோகத்துக்கும் உயர்த்தப்படவில்லை; அவர் சாதாரண மனிதர்களைப் போல் பாதசாரியாய் நடந்து கல்லும் முள்ளும் அடர்ந்த காட்டின்வழியே போய் விரோதிகளின்பார்வையினின்றும் தப்பும்பொருட்டு ஒரு பாழடைந்த இருண்ட குகைக்குள் மறைந்து தம்மை

ஒளித்துக்கொண்டார். எங்கள் ஏசுவின் (அலை) பெருமை யும் உங்கள் நபியின் சிறுமையும் வானத்துக்கும் பூமிக்கு முள்ள வித்தியாசத்தைக் காட்டவில்லையா? மற்ற நபிமார் களை ஆண்டவன் காப்பாற்றியிருந்தால் இப்புவியின் மீதே வைத்துக் காப்பாற்றினன். எங்கள் ஏசுவை (அலை) மட் டுமே ஆண்டவன் வானலோகத்தில் கொண்டுபோய்க் காப் பாற்றினன். இதனால் எங்கள் ஏசு நாதர் (அலை) மற்றெல் லாத் தீர்க்கதரிசிகளைக்காணவும் மஹாத்மாக்களைக்காணவும் மகாசிரேஷ்டரென்பது தெளிவாய் விளங்கவில்லையா?

விஞ: 6. (a) "அங்கேயே (அதாவது பூமியிலேயே) நீங்கள் வாழ்ந்து அங்கேயே நீங்கள் மரித்து அதிலிருந் தே நீங்கள் எழுப்பப்படு வீர்கள்," (அல்குர்ஆன், 7:25) என்று ஆண்டவன் ஆதத்தின் மக்களுக்குக் கூறியுள்ளான். இதற்குமாறாக யாரேனுமொருவன் தானுமொரு மனிதப் பிறவியென்று சொல்லிக்கொண்டு வானுலகில் உயிருடன் இருக்கக் கூடுமாயின் அவன் மற்றெல்லா ஆதத்தின் மக் களைக்காண ஒரு நூதனமான மனிதராயிருக்க வேண்டும். ஒரு மனிதனைப்போலவே மற்றெல்லாமனிதர்களும் உண்ப தும் உறங்குவதுமாயிருப்பது இஸ்லாத்தின் இயற்கை. இத ற்கு மாறாகமஸீஹ்(அலை)தமது பஞ்ச பூதத்தாலமைந்த சரீ ரத்துடன் தின்பதும் குடிப்பதுமில்லாமல் வானுலகில் அழி யாமல் ஒரே நிலையிலிருக்கிறார் என்றால் எமது ஈஸாநபி மற்றெல்லா மனிதர்களைக்காட்டினும் சிரேஷ்டரல்லவா?

(b) "அவர்களுக்கு (நபிமார்களுக்கு) ஆகாரம் அருந் தாத சரீரங்களை நாம் கொடுக்கவுமில்லை, அவர்கள் நிரந்தர மாய் ஜீவித்திருக்கவுமில்லை,"(அல்குர்ஆன், 21 : 8) என்று எல்லாநபிமார்களைப்பற்றியும் ஆண்டவன் சொல்லியிருக் கும்போது, மற்றெல்லா நபிமார்களைவிட ஒருவர் மட்டும்

உண்ணாமலும் உறங்காமலும் பஞ்சபூதங்களாலமைந்த இந்தச் சரீரத்துடன் அழியாமல் உயிருடனிருக்கக் கூடுமாயின் அவர் மற்றெல்லா நபிமார்களைக் காட்டிலும் மேம்பட்டவராயும் அற்புதமானவராயும் இருக்கவேண்டும். எங்கள் ஏசுநாதர் சுமார் 2000 வருஷகாலமாய்ப் பசிக்குப் போஜனமில்லாமலும் தாகத்துக்குத் தண்ணீர் அருந்தாமலும் உயிருடன் வானுலகி லிருக்கிறார்; ஆதலின் ஆகாரம் சாப்பிடாமலும் தண்ணீர் அருந்தாமலும் உயிருடனிருக்கச் சக்தியற்ற இதர நபிமார்களுடன் எங்கள் ஏசுநாதரை ஒப்பிடலாமா? மேலே சொன்ன அரியகுணங்கள் முஹம்மது (ஸல்) சாகிபுக்கு இல்லாததனால் அவரைவிட ஏசுவானவர் மகா சிரேஷ்டரா யிருக்கிறாரென்பது வெளிப்படையாய் விளங்கவில்லையா?

வி: 7. முஹம்மது (ஸல்) சாகிபாவது அல்லது வேறெந்த நபியாவது செத்த பிணத்துக்கு உயிர்கொடுத்ததுண்டா? எங்கள் ஏசு இப்படிச் செய்திருக்கிறார். (அல் குர் ஆன் 5: 110)

வி: 8. சிருஷ்டிக்கும் குணமானது "ரப்பில் ஆலமீன்" என்னும் சிருஷ்டி கர்த்தாவின் சிரேஷ்ட குணமாயிருக்கின்றது; "அல்லாஹுத் தஆலாவே எல்லா வஸ்துக்களின் சிருஷ்டி கர்த்தாவா யிருக்கிறான்," என்று ஆண்டவன் அல்குர்ஆன் 13 : 16-ல்சொல்லி யிருக்கிறான்; ஆனால் அந்தக் குர்ஆன் 5 : 110-ல் பக்ஷிகளின் சிருஷ்டி கர்த்தாவாக எமது ஏசு இருந்தாரென்று எழுதப்பட்டிருக்கிறது. ஏசுவைத் தவிர வேறெந்த நபிமார்களாகட்டும் முஹம்மது (ஸல்) சாகிபாகட்டும் இச்சிருஷ்டிக்கும் விசேஷ குணமுள்ளவர்களா யிருந்தார்களென்பதற்கு ஒன்றும் ஆதாரமில்லை. இதனால் வெளியாவது யாதெனின், சிருஷ்டிக்கும் குணமா

னது ஆண்டவனைத் தவிர ஏசுவுக்கு மாத்திரம் இருந்தது, என்பதே. ஆதலின் எங்கள் ஏசுநாதர் உங்கள் முஹம்மது (ஸல்) சாகிபைவிட மேன்மையும் சிரேஷ்டமு முள்ளவரென்பது விளக்கமாகின்றது.

வின: 9. குருடர்களுக்குக் கண்கொடுப்பதற்கும் செவிடர்களுக்குக் கேட்குங் குணங்கொடுப்பதற்கும் குஷ்டரோக முதலிய பெருவியாதிகளைப் போக்குவதற்கும் வேண்டிய அபார அற்புதசக்திகளை யெல்லாம் ஏசுநாதருக்கு ஆண்டவன் கொடுத்திருந்தானென்று குர்ஆனால் தெரிந்து கொள்ளுகிறோம் (அல்குர்ஆன், 5: 110). இப்படிப்பட்ட சக்திகள் முஹம்மது (ஸல்) சாகிபுக்கு அமைந்திருந்ததாகக் குர்ஆனால் ஒன்றும் ஏற்படவில்லை. இதனால் உங்கள் நபியைவிட எங்கள் மஸீஹ் மிகப்பெரியவரல்லவா?

வின: 10. ஜனங்கள் தங்கள் தங்கள் வீடுகளில் சாப்பிடவும் குடிக்கவும் வைத்திருக்கும் பதார்த்தங்கள் இன்ன இன்னவை யென்று ஏசுநாதர் சொல்லிவிடுகிற துண்டென்று குர்ஆனில் எழுதப்பட்டிருக்கிறது. மறைவான விஷயங்களைப்பற்றிச் சொல்லும் இவ்வரிய அற்புதகுணமானது ஆண்டவனுடைய குணமாயிருக்கிறது; மறைபொருள்களை யெல்லாம் அறியவல்ல சக்தி இறைவனிடத்தில் மட்டுமே யிருப்பதால் ஏசுவும் அப்படிப்பட்ட சக்தியில் சம்பந்தப்பட்டுத் தேவனின் அம்சமாகவே யிருக்கிறார். உங்கள் நபி இப்படியில்லை.

வின: 11. குர்ஆனில் எல்லா நபிமார்களும் பாபம் செய்தவர்களென்றே சொல்லப்பட் டிருக்கிறது. முக்கியமாக முஹம்மது (ஸல்) சாகிபுக்குச் செய்யப்பட்ட கட்டளை யாதெனின், தம்முடைய பாபங்களி னின்றும் மன்னிப்பைத் தேடவேண்டும், (இஸ்திகுபார்) என்பதே. இது

வுந் தவிர இன்னும் முஹம்மது (ஸல்) சாகிபின் நிலைமை இவ்விதமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது: "உம்மை வழி தப்பினவராகக்கண்டு பின்பு உமக்கு வழிகாட்டினான்," (அல்குர்ஆன், 93:7) என்று ஆண்டவன் சொல்கின்றான்; ஆனால் எங்கள் ஏசு ஏதேனுமொரு தவறு செய்தாரென்றாவது எப்பொழுதும் வழிதப்பினாரென்றாவது எங்கும்சொல்லப்படவில்லை. பாபமன்னிப்புக்கு மன்றாடும்படியான கட்டளையும் அவருக்கு ஒருபோதும் வந்ததில்லை. இதனால் யார் பெரியவரென்று நினைக்கிறீர்கள்?

வி: 12. முஹம்மது (ஸல்) சாகிபு மற்றெல்லா மனிதர்களையும் போல் 63 அல்லது 64-வது வயதில் இறந்து 13 நூற்றாண்டுகளுக்கு முன்னே மண்ணில் அடக்கமாகி மண்ணோடு மண்ணாகிவிட்டார். ஆனால் எங்கள் ஏசு 2000 வருஷகாலமாய் வானலோகத்தில் இந்தப் பூதஉடம்போடு உயிருடனிருக்கிறார், இன்னும் உயிருடனிருப்பார். இவ்விருவரில் யார் பெரியநபி?

வி: 13. இதன் கீழ்க்காணும் விஷயமும் இஸ்லாத்தின் உறுதியான கொள்கைகளுள் ஒன்றாயிருக்கின்றது: கியாமத்துக்கு (லோகமுடிவுகாலத்துக்கு)க் கொஞ்ச முன்னே ஒருபெரிய கிளர்ச்சி யுண்டாகும்; தீமைகளையும் விக்கிரக ஆராதனையையும் அதிகமாய்ப் பரப்பக்கூடிய தஜ்ஜால் வருவான்; இவனை நாசஞ்செய்யவும் வழிவிலகிப்போன முஹம்மது (ஸல்) நபியின் உம்மத்துகளை (முஸ்லிம்களை) நேர்வழியில் கொண்டு வரவும் சத்தியசன்மார்க்கத்தை நிலை நிறுத்தவும் மஸீஹ் வானலோகத்திலிருந்து இறங்கி வருவார். "வேதங்கள் இறங்கிய கூட்டத்தார்களெல்லாரும் அவர்மீது ஈமான் கொள்ளுவார்கள்," (குர்ஆன்) என்று ஆண்டவனும் குர்ஆனில் சொல்லியிருக்கிறான்.

முஹம்மது (ஸல்) சாகிபு முடிவான தீர்க்கதரிசியாயும் கடைசி காலத்தின் நபியாயும் இருப்பது உண்மையாயின் கடைசிகாலத்தின் கொடியகிளர்ச்சியை நாசம்செய்வதற்கும் உண்மையை நிலைநிறுத்து வதற்கும் வேண்டிய பெரிய காரியத்தை நிறைவேற்றுவதற்கு அவரைப் புதைகுழியிலிருந்து (கபரிலிருந்து) ஏன் எழுப்பி அனுப்பக்கூடாது? முடிவில் எல்லாத்தீக்குணங்களையும் உறுதிப்பாடில்லாத கெட்ட துன்பங்களையும் நீக்கிச் சன்மார்க்கத்தை ஸ்திரப்படுத்தும் காரியம் எக்காரணத்தால் மஸீஹ்மவ்ஊதின் வேலையெனத் தீர்மானிக்கப்பட்டது? இப்பெருமையும் சிறப்பும் அவருக்கு எக்காரணத்தால் கொடுக்கப்பட்டிருக்கிறது? முடிவாகக் கியாமத்து நாளில் அவரே எல்லோருக்கும் உதவிபுரிவார்; எல்லாரும் அவர்பேரிலேயே ஈமான் கொள்ளுவார்; முஹம்மது (ஸல்) சாகிபின் புதைகுழியிலுள்ள புழுதிக்குக்கூட இவ்விஷயங்களின் சமாசாரம் எட்டாது.

வினா: 14. முஹம்மது (ஸல்) சாகிபு பாபம் செய்த மனிதராகவும் வெறுந்தூதராகவும் இருந்தாரென்பது குர்ஆனாலேயே ஏற்படுகிறது; ஆனால் எங்கள் ஏசு நாதரைப் பற்றியோ; 'அவனுடைய (மரியமுடைய) உடம்புக்குள் நாம்நம்முடைய ஆவியை உட்புகுத்தினோம்," (அல்குர்ஆன், 21 : 91) என்று ஆண்டவன் கூறியுள்ளான்; இதனால் ஏசு யாதொருபாபமும் செய்யாதவராயும் தெய்விகம் பொருந்தின தேவனாயும் இருக்கிறாரென்றும் இவருக்கெதிரில் முஹம்மது (ஸல்) சாகிபு யாதொரு பிரயோஜனமற்ற பொருளாக இருக்கிறாரென்றும் வெள்ளிடை விலங்கல்போல் தெள்ளிதில் உணர்கின்றோம்.

மேற்கூறிய 14 விசித்திரவினாக்களையும் நாம் நன்கு

நோக்குவோமாயின் நமது தீனுல் இஸ்லாமென்னும் சுத்தசத்திய சன்மார்க்கத்தைக் காட்டினும் ஈஸாயிமதஹபே (கிரிஸ்துமார்க்கம்) மகாசிலாக்கியமானதென்றும் நமது சன்மார்க்கத்தால் ஒன்றும் ஈடேற்றத்துக்கு வழியில்லையென்றும் இவ்வுலகத்தவருக்கு எண்பிக்க ஊடியாஞவிலுள்ள கிரிஸ்துமதப் பாதிரிமார்கள் பிரயாசைப்படுவதாய் ஏற்படுகின்றது. இவர்கள் இஸ்லாமார்க்கத்தின் மூலக்கொள்கையின் அடிமடியில் கையைவைத்து எமது முஸ்லிம் சகோதரர்களின் ஈமானை அசைக்கப் பார்க்கின்றனர். அன்னியமதத்தினர் கேட்கும் பிதற்றலான கேள்விகளுக்கெல்லாம் நம் முஸ்லிம்கள் விடையளிக்கக் கட்டுப்பட்டில்லையென்று ஷை 14 வினுக்களையும் சாமான்யமென்று கருதி நாம் சும்மா இருப்பது தகாது. கடைசி நபி ஈசா அலைஹிஸ்ஸலா மென்றும் கடைசிமார்க்கம் கிரிஸ்தவமார்க்க மென்றும் இது மற்றெல்லா மதங்களைக் காட்டினும் சிறந்ததென்றும் அவர்கள் எண்பிக்கப் பிரயத்தனப்பட்டு எமது இஸ்லாத்தின் ஆணி வேரையே அசைக்கின்றரானமையின் இவ்வினுக்களுக்குத் தக்கவிடை பகர்ந்து எல்லாமார்க்கங்களைவிட எமது தீனுல் இஸ்லாமென்னும் சன்மார்க்கமே சுத்த சத்தியமானதென்றும் இது மற்றெல்லா மதங்களைங்காட்டினும் மகாசிலாக்கியமானதென்றும் எமது நபியவர்களே கடைசி நபியென்றும் எமது திருவேதமே கடைசி வேதமென்றும் உலகோர் அறியும்படி செய்வது எமது கண்ணுண்மணியான கருத்துக்கினிய மகாபெரிய மௌல்விகளின் கடமைகளுள் முதற்கடமையாயிருக்கின்றது. இவ்வினுக்களுக்கு விடையளிக்காமற் போவோமாயின் எமது இஸ்லாமார்க்கம் உண்மையில் கிரிஸ்தவமதத்தை விடத் தாழ்ந்ததென்றே

உலகத்தவர் சந்தேகிக்க நேரிடும். இப்போது இஸ்லாத்துக்கிருக்கும் ராஜீய செல்வாக்குத் தாழ்ந்திருப்பதோடு அதன் கொள்கைகளும் பிரயோஜன மற்றவையென்று ஏற்படும். இப்படிப்பட்ட நிலைமைக்கு இஸ்லாம் வந்துவிடாமல் காப்பாற்றவேண்டுவது நம்முள் ஒவ்வொருவருக்கும் கடமையாயிருக்கின்றது.

"அவர்கள் தங்களுடைய வாயால் ஊதி அல்லாஹுத் தஆலாவின் ஒளியை அணைக்க விரும்புகிறார்கள்; நம்பிக்கையற்றவர்கள் வெறுப்பாயிருந்தபோதிலும் அல்லாஹுத் தஆலா தன் ஒளியைப் பூர்த்தியாக்குவதைத் தவிர வேறுவிதம் செய்ய இணங்கான்.

"பலதேவதை வணக்கக்காரர்கள் வெறுப்புடனிருந்தபோதிலும் எல்லா மார்க்கங்களைக்காட்டிலும் இச்சன் மார்க்கம் சிலாக்கிய மடையும்படி அவன் செய்வதற்காக வழிகாட்டியுடனும் உண்மையான மார்க்கத்துடனும் தன்னுடைய திருத்தூதரை அனுப்பியவன் அவனே." (அல் குர்ஆன், 9:32,33.)

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத்தஆலாவின் திருநாமத்தால்.
நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக்கூறுகின்றோம்.

PHYSICALITY, MORALITY, SPIRITUALITY

ஆத்மாவின் முவ்வகைநிலை

நாம் இங்கு எடுத்துக்கொண்ட விஷயம் நமது ஆத்மாவின் முவ்வகைநிலை என்பதாகும். ஆத்பதத்துவநிலை (Spiri-